Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 46 of 2024

DATE : 06.09.2024

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | **மான்ராஜ்** | Caste | |
| Father/Husband's Name | **சின்னகன்னு** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of September 2024 Time: 11.57 am – 12.15 am

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

1) நான் தம்பிபட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன சோலையம்மாள் என் அம்மா. 13.12.2022 அன்று என் அம்மா தம்பிபட்டியில் இருந்து என் பெரியம்மாவை பார்க்க அக்கனாபுரம் சென்றார். பார்த்துவிட்டு திரும்ப அக்கனாபுரம் பஸ் ஸ்டாப்பில் 2.50 மணிக்கு நின்று கொண்டிருந்தார். மீனாம்பிகை என்ற பஸ்ஸில் ஏறிய போது பஸ்ஸின் ஓட்டுநர் கவனம் இல்லாமல் வண்டியை எடுத்ததால் என் அம்மா கீழே விழுந்து கால் முறிந்து தலையில் அடிப்பட்டுவிட்டது. என் அம்மாவை 108 ஆம்புலன்சில் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு கூட்டி வந்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பினார்கள். மதுரைக்கு செல்லும் வழி சுப்புலாபுரம் அருகே என் அம்மா இறந்துவிட்டார். பிறகு என் அம்மாவை வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு கூட்டி வந்துவிட்டோம். நான் வீட்டில் இருந்த போது எங்கள் ஊரை சார்ந்த தம்பி முறையான தமிழரசன் தகவல் சொல்லி என்னை இருசக்கர வாகனத்தில் கூட்டி சென்றார். நாங்கள் செல்லும் வழியிலேயே என் அம்மாவை கூட்டி வந்த 108 ஆம்புலன்சை வழியிலேயே பார்த்து நான் அந்த ஆம்புலன்சில் ஏறிக் கொண்டேன். தம்பிபட்டியில் என் மனைவி அந்த ஆம்புலன்சில் ஏறிக்கொண்டார். இது சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) என் அம்மாவிற்கு 80 வயது இருக்குமா என்றால் 65 வயது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது கையெழுத்து மட்டும் தான் போட தெரியுமா என்றால் ஆமாம். புகார் யார் எழுதிக் கொடுத்தது என்றால் என் தம்பி தமிழரசன் எழுதினான். என் அம்மா

சோலையம்மாள் பஸ்ஸின் பின்படிக்கட்டில் ஏற முயற்சித்த போது கீழே விழுந்ததாக பாலமுருகன் சொன்னதாக தமிழரசன் என்னிடம் சொன்னார் என்றால் அவர் பஸ்ஸில் ஏறிவிட்டார் டிரைவர் தான் கவனக்குறைவாக இருந்தார் என்று சொன்னார். பாலமுருகன் என்ன சொன்னாரோ அதை தான் தமிழரசனும் என்னிடம் சொன்னார் என்றால் ஆமாம். என் அம்மா வயோகிதத்தின் காரணமாக கையில் பொருளுடன் பஸ்ஸில் ஏறும் போது கீழே விழுந்து விட்டார் என்று சொன்னால் இல்லை என் அம்மா கையில் பொருள் எதுவும் எடுத்துவரவில்லை. புகார் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் நத்தம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன். சம்பவம் நடந்ததாக நான் கேள்விப்பட்ட இடம் அக்கானபுரம் பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். ஆம்புலன்சில் பாலமுருகனும், பால்ராஜ் எங்களுடன் வரவில்லை என்றால் சரிதான். பால்ராஜீம், பாலமுருகனும் என் உறவுகாரர்கள் என்றால்ஆமாம். அவர்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அதனால் தான் அவர்கள் ஆம்புலன்சில் வரவில்லை என்றால் சரியல்ல. என் அம்மாவின் இறப்பிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யான தகவலை கேள்விப்பட்டு பொய் புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்கும் போது எத்தனை மணியிருக்கும் என்றால் இரவு 7 மணிக்கு மேல் இருக்கும்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு